MCOP.No. 33/2019

Dated : 12.10.2023

Time: 03.05 p.m to 03.20 p.m

P.W- 2 பெரியசாமி சாட்சி மூக்காயி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2-ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை

1) நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என்னுடைய முதல் சாட்சியததில் என் மீது மோதிய வண்டியின் எண். TN 30 Q 1572 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வண்டி 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு எதுவும் செய்யப்படவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி வாகனம் 2-ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யாததால் அவருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

2) நான் சப்ளையராக பணி செய்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பள ரசீதை வழக்கிற்காக எங்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சமயத்தில் என் மீது மோதியதாக சொல்லும் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். 24.02.2018 ஆம் தேதியிட்ட மருத்து ரசீது 2 முறை ரூ.77,350/- சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நான் முன்நிறுத்திய மருத்துவ ரசீதுகளில் நான் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டதற்கான மொத்த தொகை ரூ.1,27,350/- இவ்வழக்கிற்காக அதிகபடுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) மேற்படி நான் முனநிறுத்திய ரசீதுகள் அதிகபடியான சொல்லப்பட்டுள்ளது என சம்மந்தப்பட்ட மருத்துவமனையே கொடுத்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் நான் மருத்துவத்திற்காக செலுத்திய தொகை ரூ.1,31,667/- என்றும் ஆனால் நான் அதிகமான தொகைக்கான ரசீதை முன்நிறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வயதை காண்பிக்க சரியான ஆவணத்தை நான் முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகைகளை மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல.

4) தற்போதும் நல்ல திடகாத்திரமாக தான் இருக்கிறேன் என்றும் விபத்தால் எனக்கு எவ்வித நிரந்தர பாதிப்பும் இல்லை என்றும் மேலும் மேற்படி ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டப்பட்டதால் 1-ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் 2-ம் எதிர்மனுதாரருக்கும் எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Accidents Claim Tribunal**
**Attur.**